**சார்பு நீதிமன்றம், துறையூர்.**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**OS.No.134/2021**

தேதி: 27.03.2026

பெயர் : கனகராசு (வா.சா.2) த/பெ: காத்தமுத்து

**குறுக்குவிசாரணை**

1. தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும் எப்படி பழக்கம் என்றால் ஒரே அலுவலகத்தில் வேலை செய்வதால் பழக்கம். முசிறி கால்நடை மருத்துவமனையில் ஒன்றாக வேலை பார்க்கிறோம், அந்த வகையில் வாதியுடன் பழக்கம். நான் தான் வாதியிடம் பிரதிவாதியின் வீடு விற்பனைக்கு உள்ளது என்ற தகவலை கூறினேனா என்றால் ஆமாம். நான் பிரதிவாதியின் வீட்டை பார்த்துள்ளேன். அது ஓட்டுவில்லை மற்றும் கூரைவீடாகும். மேற்படி வீட்டின் மதிப்பு அந்த சமயத்தில் எவ்வளவு இருக்கும் என்றால் ரூ.4,50,000/- இருக்கும். எதன் அடிப்படையில் ரூ.4,50,000/- மதிப்பு என கூறுகிறேன் என்றால் அந்த ஏரியாவின் மதிப்பு வைத்து தெரிந்து கொண்டேன். அந்த ஏரியாவில் சதுரஅடி என்ன விலைக்கு விற்கும் என தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. சென்ட் கணக்கில் தான் தெரியும். அந்த ஏரியாவில் 1 சென்ட் நிலம் எவ்வளவு விற்கும் என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்து கண்ணனூர் மெயின்ரோட்டில் சந்தைக்கு அருகே உள்ளது என்றால் சரிதான். வாதி கிரைய ஒப்பந்தம் போட்ட காலத்தில் தாவா சொத்தின் மதிப்பு ரூ.20,00,000/-த்திற்கு மேல் இருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி தாவா சொத்தை விற்பதற்காக கிரைய ஒப்பந்தம் போடவில்லை எனவும், வாதியிடம் பெற்ற கடனுக்காக தான் கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் ஏற்படும்போது பிரதிவாதியின் கணவர் பாஸ்கரனும் வந்திருந்தார், நானும் சென்றிருந்தேன். வாதி ரூ.4,00,000/- அப்போது கொடுத்தார். கிரைய ஒப்பந்தத்திற்கு கெடு ஒருவருட காலம் போட்டார்கள். பாக்கி கிரைய தொகை ரூ.50,000/- கொடுக்க வாதிக்கு ஒரு மாத காலம் அவகாசம் போதும் என்றால் சரிதான். தாவா கிரைய

ஒப்பந்தம் கடனுக்காக ஏற்பட்டதால் தான் ஒருவருட காலம் கெடு காலம் என ஏற்பட்டது என்றால் சரியல்ல. வாதி கொடுத்த கடன் தொகைக்கு பிரதிவாதி மாதமாதம் ரூ.100/-க்கு ரூ.3/- வட்டி வீதம் ரூ.12,000/- கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி தன் கணவருக்கு டாடா ஏஸ் வாகனம் வாங்குவதற்காக தான் வாதியிடம் கடன் பெற்றிருந்தார் என்றால் இல்லை. டாடா ஏஸ் வாகனம் வாங்கப்பட்ட காலம் கொரோனா காலம் என்பதால் அந்த வாகனத்தை வைத்து சம்பாதித்து கடனை கட்டமுடியாமல் அவருக்கு நஷ்டம் ஏற்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. டாடா ஏஸ் வாகனத்தை கடன் கொடுத்த நிதிநிறுவனம் 03.06.2021ம் தேதி எடுத்து கொண்டு சென்றுவிட்டது எனவும், அதனை விற்று ரூ.2,00,000/- வாதிக்கு நிதிநிறுவனம் கொடுத்தது என்றால் கொடுக்கவில்லை. வாதி மீது உள்ள நம்பிக்கையினாலும் பிரதிவாதியின் அறியாமையாலும் ரூ.2,00,000/- திருப்பி கொடுத்ததற்கு ரசீதும், கிரைய ஒப்பந்த பத்திரத்தின் மேற்கோள் காட்டி எழுதவும் செய்யவில்லை என்றால் தெரியாது. பிரதிவாதிக்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்து குடியிருக்க இல்லை என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு குடியிருக்க வேறு வீடு இல்லாததால் தாவா சொத்தை விற்க வேண்டிய அவசியம் பிரதிவாதிக்கு இல்லை என்றால் சரியல்ல. ரூ.20,00,000/- மதிப்புள்ள வீட்டை வாதிக்கு ரூ.4,50,000/-க்கு விற்க வேண்டிய அவசியம் பிரதிவாதிக்கு இல்லை என்றால் வீட்டை விற்கிறேன் என பிரதிவாதி கூறினார் வாதி வாங்கினார். வரவு செலவு குறித்து எனக்கு எந்த விவரமும் தெரியாது, வாதி என்னுடன் வேலை செய்வதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் உண்மையாக இருக்கும்பட்சத்தில் தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சாட்சியாக கையெழுத்து செய்திருப்பேன் எனவும், நான் சொல்வது பொய் என்பதால் தான் மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

(ஒம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.

**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**
**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**<u>OS.No.134/2021</u>**

வாதி தரப்பு <u>வா.சா.3</u>ன் வாக்குமூலம் 1873ம் ஆண்டில் 10வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு.S.கிருஷ்ணன், இருக்கை எழுத்தர் நிலை-2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவிமணி | த/பெ | : | தேக்கன் |
| | | | க/பெ | : | |
| வயது | : | | ஊர் | : | |
| தொழில் | : | | அலைபேசி எண் | : | |
| தேதி | : | 27.03.2026 | முகவரி | : | |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரிந்து என்னால் உண்மை என சொல்லப்பட்டவை தான். நான் தாக்கல் செய்துள்ள முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| வ. எண். | நாள் | ஆவண விபரம் | ஆவணத் தன்மை | |
|---|---|---|---|---|
| 1. | | ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) | ஜெராக்ஸ் நகல் | வா.சா.ஆ.6 |

தாவாப்படி தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை 06.04.2026 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

/ உண்மை நகல்/

(ஓம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.